تاميلي
தமிழ்

معهد السنة
As-Sunnah College

MahadSunnah

# صلاة الجنازة

# ஜனாஸா தொழுகை


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

# ஜனாஸா தொழுகை

ஜனாஸா தொழுகை ஃபர்ழு கிபாயா எனப்படும் கடமையான தொழுகைகளில் ஒன்று.

- ## தொழும் முறை:

இமாமுக்கு முன்னால் முதலில் ஜனாஸாவை வைக்கப்படும், பின்னர் இமாம் அவர்கள் ஜனாஸா ஆணாக இருந்தால் அதன் தலைப் பக்கமாகவும், பெண்ணாக இருந்தால் அதன் நடுப்பகுதியிலும் நிற்பார்.

- **ஜனாஸா தொழுகை நான்கு தக்பீர்களைக் கொண்டது, ஒவ்வொரு தக்பீரிலும் கைகளை உயர்த்தி முதலாவது தக்பீருக்குப் பின் சூரா பாத்திஹா ஓதப்படும்,**
- **இரண்டாம் தக்பீருக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் மீது அத்தஹிய்யாத்தில் ஓதும் ஸலவாத் ஓதப்படும்.**
- **மூன்றாம் தக்பீருக்குப் பின் உளத்தூய்மையுடன் ஜனாஸாவுக்காக துஆவில் ஈடுபடல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆவை ஓதுவது நன்று.**
- **பின்னர் நான்காம் தக்பீர் சொன்னதும் சற்று நேரம் தாமதித்து வலப்பக்கமாக ஒரு முறை சலாம் சொல்லப்படும்.**
- **இரண்டாவது முறையும் சலாம் சொல்வதில் தவறில்லை ஏனெனில் அதற்கும் சில ஆதாரங்கள் உண்டு.**

- ## குறைமாத சிசு (விழு கட்டி):

இதைப் பொறுத்தவரை நான்கு மாதங்கள் கழிந்து மரணித்து விழுந்தாள் அதற்காக தொழுகை நடத்தப்பட்டு, அதன் பெற்றோர்களுக்காக மன்னிப்பும், ரஹ்மத்தும் வேண்டி பிரார்த்திக்கப்படும். இது சம்பந்தமாக ஒரு ஹதீஸு ம் வந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்க.

- ## மறைவான ஜனாஸா தொழுகை:

மறைவான ஜனாசாவை பொறுத்தவரை, தொலைவில் மரணித்து ஜனாஸாத் தொழுகை நடத்தப்படாவிட்டால் மறைவான ஜனாஸா தொழுகையை நாம் நிறைவேற்ற முடியும். நபி (ஸல்) அவர்கள் அபிசீனியா மன்னருக்கு மதீனாவில் தொழுவித்தார்கள்.

ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்பவர்கள் எவ்வளவு அதிகம் பேர் இருப்பார்களோ அது மய்யித்துக்கு சிறந்தது. நபி (ஸல்) கூறினார்கள்:

**எந்த ஜனாஸாவுக்கு 100 பேரை எட்டும் அளவு பெரும் கூட்டத்தினர் தொழுது அவருக்காக எல்லோரும் பிரார்த்திப்பார்களாயின் அவர்களின் பிரார்த்தனையை அல்லாஹ் மறுப்பதில்லை.** (முஸ்லிம்:947)

இறைமறுப்பாளர்களுக்கு ஜனாஸா தொழுகை நிறைவேற்றுவது கூடாது. திருமறையில் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு கூறுகின்றான்:

அவர்களில் மரணித்த எவருக்கும் ஒருபோதும் தொழுவிக்க வேண்டாம், அவர்களின் மண்ணறையில் நின்று பிரார்த்திக்கவும் வேண்டாம், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுத்துவிட்டனர், அவர்கள் தீயோர்களாகவே மரணித்தனர். (9:84)